வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந.க.எண். 4379/ஆ4/2025 நாள் :30.04.2026

பொருள் : பள்ளிக் கல்வி - வேலூர் மாவட்டம் 2025 - 2026-ம் கல்வியாண்டு மேல்நிலை முதலாமாண்டு தேர்வு முடிவுகள் - தேர்வுக் குழு அமைத்தல் - தேர்ச்சி பட்டியலில் மேலொப்பம் - தேர்வு முடிவுகள் வெளியிடுதல் - தொடர்பாக

பார்வை : இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள் நாள் 24.04.2026

-----

வேலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அனைத்து வகை பள்ளிகள் சார்ந்து 6 மேல்நிலை முதலாமாண்டு தேர்வு முடிவுகள் வெளியிட 24.04.2026-ல் அனுப்பப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றுமாறும் அரசு / அரசு நிதியுதவி / ஆதிதிராவிடர் நலத்துறை உயர்நிலை /மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் மெட்ரிக் பள்ளிகளின் முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிகளின் தேர்ச்சி விவரத்தினை ஒருங்கிணைந்த மதிப்பெண் பதிவேடு மற்றும் மதிப்பெண் பட்டியல் ஒரு நகல் தங்கள் வட்டாரத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தேதியில் சரிபார்ப்பு மையங்களுக்கு சென்று அமைக்கப்பட்டுள்ள குழுக்களின் மூலம் சரிபார்க்கப்பட்டு மேலொப்பம் பெற்று முதன்மைக் கல்வி அலுவலர் ஒப்புதல் பெற கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**குறிப்பு:**

**தேர்ச்சி அறிக்கை சரிபார்ப்பு குழுவிடம், 2025-2026ஆம் கல்வி ஆண்டில் வினாத் தாள்கட்டணம் செலுத்தியதற்கான இரசீது நகல், பெற்றோர் ஆசிரியர் கழக சந்தா செலுத்திய இரசீது நகல், Scout, JRC, Medical Fee கட்டண இரசீது நகல் மற்றும் பெற்றோர் ஆசிரியர் கழக 5 % மாவட்டக் கல்வி அலுவலகங்களில் செலுத்திய விவரம் ஆகியவை ஒப்படைக்க வேண்டும்.**

**சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்**

1. ஒருங்கிணைந்த மதிப்பெண் பதிவேடு

2. தேர்ச்சி பதிவேடு (தேர்ச்சி அறிக்கை -1நகல்)

3. படிவம் (1முதல் 4 வரை -1 நகல் மட்டும்)

//ஓம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

- அனைத்து அரசு/ உதவிபெறும்/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்.

நகல்:-

- மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை /தனியார்), வேலூர் அவர்களுக்கு தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
- மாவட்டக் கல்வி அலுவலர்(தொடக்கக்கல்வி )அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பப்படுகிறது.

| அட்டவணை | | | | |
|---|---|---|---|---|
| வ .எண் | ஒன்றியம் | சரிபார்க்கும் மையத்தின் பெயர் | நாள் | குழு பொறுப்பு தலைமையாசிரியர்கள் திருவாளர்கள் |
| 1 | கணியம்பாடி | அரசு மேல்நிலைப்பள்ளி கணியம்பாடி | 07.05.2026 | எ.தனஞ்செழியன், தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, சோழவரம் |
| 2 | அணைக்கட்டு | அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி அணைக்கட்டு | 06.05.2026 | ர.இரவிச்சந்திரன், தலைமையாசிரியர், அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி, அணைக்கட்டு |
| 3 | குடியாத்தம் | நகரவை மேல்நிலைப்பள்ளி குடியாத்தம் | 07.05.2026 | எம்.கீதா, தலைமையாசிரியர், அரசு (ம) மேல்நிலைப்பள்ளி, நெல்லூர்பேட்டை குடியாத்தம் |
| 4 | கே.வி.குப்பம் | அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி கே.வி.குப்பம் | 07.05.2026 | வி.எஸ்.ரவி, தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, செஞ்சி |
| 5 | பேர்ணாம்பட்டு | அரசு (ம) மேல்நிலைப்பள்ளி பேர்ணாம்பட்டு | 07.05.2026 | வி.அமானுல்லா, தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, அழிஞ்சிகுப்பம் |
| 6 | வேலூர் நகர் | அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி வேலூர் | 06.05.2026 | கே.சித்ரா, தலைமையாசிரியர், வி.கே.வி.எம்.அரசு (ம) மேல்நிலைப்பள்ளி, வேலப்பாடி |
| 7 | வேலூர் புறநகர் | அரசு மேல்நிலைப்பள்ளி கொணவட்டம் | 06.05.2026 | கே.சீனிவாசன், தலைமையாசிரியர், அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி, ஊசூர் |
| 8 | காட்பாடி | அரசு (ஆ) மேல்நிலைப்பள்ளி காட்பாடி | 06.05.2026 | பு.தனலட்சுமி, தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, வஞ்சூர் |

//ஒம். //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.